# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1995 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பணச்சட்டம் (திருத்தச்) சட்டம்

---

*(1995, நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1995, நெவம்பர் மாதம் 17 ஆந் தேதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை சதம் : 60 — தபாற் செலவு ரூபா 2.00

**1995 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பணச் சட்டம். (திருத்தச்) சட்டம்**

[1995, நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ 83/93

**பணச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பண (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். — சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின் V ஆம் அத்தியாயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் இது அச்சட்டவாக்கத்தின் Vஅ என்னும் அத்தியாயமாகப் பயனுறுதலும் வேண்டும். — 422 ஆம் அத்தியாயத்தில் அ என்னும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்தல்.

"அத்தியாயம் V அ

**மத்திய வங்கி குறித்த சில கம்பனிகளில் பங்குகளைக் கொள்வனவு செய்தல்**

மத்திய வங்கி குறித்த சில கம்பனிகளில் பங்குகளைக் கொள்வனவு செய்தல்.

105அ. இச்சட்டத்திலுள்ள வேறு ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்திலுள்ள எது எவவாறிருப்பினும் மத்திய வங்கியானது, பணச்சபையின் அபிப்பிராயப் படி, இலங்கையிலுள்ள வங்கித் தொழில் மற்றும் நிதி சார் துறையின் மனித வளங்களையும் தொழில்நுட்பவியல் அபிவிருத்தியையும் முன்னெடுத்துச் செல்வதற்கும் ஊக்குவிப்பதற்குமென உருவாக்கப்பட்ட ஏதேனும் கம்பனியில் பங்குகளைக் கொள்ளலாம் அல்லது வைத்திருக்கலாம் அல்லது இச்சட்டத்தின் 98 ஆம் அல்லது 112அ என்னும் பிரிவின் (i) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லா அல்லது எவையேனும் வசதிகளை ஏற்பாடு செய்யலாம்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 112 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 112அ மற்றும் 112ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதல் வேண்டும். — முதன்மைச் சட்டவாக்கத்தில் 112அ மற்றும் 112ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

"வர்த்தகச் சார்பற்ற வங்கிகளின் முதனிலை வியாபாரிகளால் பேணப்படும் கணக்குகள்.

112அ. மத்திய வங்கியானது,

(அ) பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்களைக் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்திற்காக மத்திய வங்கியில் கணக்குகளைப் பேணுவதற்கு வர்த்தக சார்பற்ற வங்கிகளாகிய முதனிலை வியாபாரிகளுக்கும் ;

(ஆ) பங்குத் தொகைச் சான்றிதழ் இல்லாத பிணையங்களை வைத்திருத்தல், ஆயந்தீர்த்தல், நேரடிப் பங்கேற்பாளர்களிடையே பங்குத்தொகைச் சான்றிதழ் இல்லாத பிணையங்களில் கொடுக்கல் வாங்கல்களைச் செலுத்தித்தீர்த்தல் ஆகிய நோக்கத்திற்கென மத்திய வங்கியில் கணக்குகளைப் பேணுவதற்கு வர்த்தக வங்கிகள் அல்லாத எவரேனும் நேரடிப் பங்கேற்பாளர்கள் உட்பட நேரடிப் பங்கேற்பாளர்களுக்கு,

வசதிகளை ஏற்பாடு செய்தல் வேண்டும்;

"நேரடிப் பங்கேற்பாளர்" என்பது, பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி, பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் 21ஈ என்னும் பிரிவின் கீழ் அல்லது உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் நேரடிப் பங்கேற்பாளர் நடுவராக நியமிக்கப்பட்ட ஆளொருவர் என்று பொருள்படும் ;

"வர்த்தகச் சார்பற்ற வங்கியான முதனிலை வியாபாரி" என்பது ஒரு வர்த்தக வங்கியல்லாத முதனிலை வியாபாரி ஒருவர் என்று பொருள்படும் ;

"முதனிலை வியாபாரி" என்பது பங்குத் தொகுதிக்கும் பிணையங்களுக்குமான முதனிலை மற்றும் இரண்டாந்தர எதிர்த்திறத்தவரொருவராக மத்திய வங்கியுடன் நடவடிக்கையை மேற்கொள்ளும் நோக்கத்திற்கு முதனிலை வியாபாரி ஒருவராக பணச்சபையால் நியமிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கி, கம்பனி அல்லது வேறு ஆள் என்று பொருள்படும் ;

"பங்குத் தொகைச் சான்றிதழ் இல்லாத பிணையங்கள்" என்பது பங்குத் தொகைச் சான்றிதழ் இல்லாத விதத்தில் வழங்கப்பட்ட பிணையங்கள் என்று பொருள்படும் ; அத்துடன்

"பிணையங்கள்" என்பது —

(i) பங்குத் தொகைச் சான்றிதழ் இல்லாத விதத்தில் வழங்கப்பட்டதாயினுஞ்சரி, வேறு வகையில் வழங்கப்பட்டதாயினுஞ்சரி உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் ;

(ii) பங்குத் தொகைச் சான்றிதழ் இல்லாத விதத்தில் வழங்கப்பட்டதாயினுஞ்சரி வேறுவகையில் வழங்கப்பட்டதாயினுஞ்சரி பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்பட்டதான பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதி அல்லது பிணையங்கள் ;

(iii) பங்குத்தொகைச் சான்றிதழ் இல்லாத விதத்தில் வழங்கப்பட்டதாயினுஞ்சரி, வேறுவகையில் வழங்கப்பட்டதாயினுஞ்சரி, மத்திய வங்கியின் எவையேனும் பிணையங்கள் என்பது பொருள்படும்.

98(1) அல்லது 113அ என்னும் பிரிவின் கீழ் பணிகளை நிறைவேற்றுவதற்கு கட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழு வசதிகளை ஏற்பாடு செய்தல்.

112ஆ. மத்திய வங்கியானது, 98 ஆம் பிரிவின் (i) ஆம் உட்பிரிவால் அல்லது 112அ என்னும் பிரிவால் அதன்மீது சுமத்தப்பட்ட கடமைகளைப் புரியும் நோக்கத்திற்கென அப்பிரிவுகளில் குறிப்பிடு செய்யப்பட்ட எல்லா வசதிகளையும் அல்லது அவற்றின் எதனையும் ஏற்பாடு செய்வதற்கு ஏதேனும் கட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு அதிகாரமளிக்கலாம்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,859 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல. 32 திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், ஹோட்டல் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.